
ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

Rs.10/-




Namadwaar Website Home Page

printed with permission from www.namadwaar.org



| | | |
|---|---|---|
| வேணு : 12 | மே – 2007 | கானம் : 10 |

www.madhuramurali.org



ஹரே ராம... மஹாமந்திர நகர்வல நாமகீர்த்தனம்
இடம்: பரமக்குடி, தேதி : 09.04.2007



"ஹரே ராம.... நாமகீர்த்தன" கூட்டுப் பிரார்த்தனை
இடம்: பெரியகுளம்
தேதி : 11.04.2007, 12.04.2007



நாமத்வார் துவக்கவிழா
இடம்: சேலம், தேதி : 02.05.2007.
ஸ்ரீ ஸ்வாமிஜியுடன் திரு S.வெங்கடராமன்,
பேராசிரியர் திரு கருணாகரன்,
திருமதி ஷீலா வெங்கடராமன்



ஸ்ரீ ஸ்வாமிஜியுடன் தென்மாவட்ட
ஒருங்கிணைப்பாளர்
தூத்துக்குடி திரு K.கதிரேசன் அவர்கள்



ஸ்ரீ ஸ்வாமிஜியுடன்
பெரியகுளம் ஹரே ராம R.கிருஷ்ணகுமார்






ப்ரஹ்மஸ்ரீ V.ஸ்வாமிநாத ஆத்ரேயர் அவர்களின்
"ஜானகீ விஜயம்" உபன்யாசம்



உதயாஸ்தமன ஸப்தாஹ மஹோத்ஸவம்
இடம்: மதுரபுரி
தேதி : 15.04.2007 முதல் 22-04-2007 வரை



ஸ்ரீ சாந்தீபனி குருகுல பாடசாலையின்
12-வது ஆண்டு விழா
இடம்: மதுரபுரி. தேதி : 01.05.2007



இடம்: பிரேமிக பவனம்.சென்னை
தேதி : 01.04.2007 முதல் 06-04-2007 வரை



சிறப்பு விருந்தினர்
குரு கைங்கர்ய ரத்னம் திரு D.தீனதயாளன்
(Vijay Associates,Buliders & Promoters,Chennai)



**Registered as Newspaper in India R. No. 62828 / 95**
Date of Publication: 5th and 6th of Everymonth

| Regd. No. TN / CC (S) DN / 119 / 06-08 | Licensed to Post without prepayment WPP NO.TN / CC (S) DN / 51 / 06-08 |
|---|---|

| வேணு : 12 | மே– 2007 | கானம் :10 |
|---|---|---|





கூட்டுப் பிரார்த்தனையில், ஸ்ரீ ஸ்வாமிஜியுடன்
The Divine Life Society, மதுரை
தலைவர் ஸ்ரீ சுந்தரானந்த சரஸ்வதி ஸ்வாமிகள்






"ஹரே ராம.... நாமகீர்த்தன"
கூட்டுப் பிரார்த்தனை
இடம்: லக்ஷ்மீ சுந்தரம் ஹால், மதுரை
தேதி : 14.04.2007.

Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No. 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083 and Printed by Mrs. Sri. Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar. Website : www.madhuramurali.org;
e-mail : contact@madhuramurali.org ; publications@madhuramurali.org

ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அருளாசியுடன்

# மதுரமுரளி

**தெய்வீக மாதப் பத்திரிகை**


வேணு : 12 மே 2007 கானம் : 10


## பொருளடக்கம்

பக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம் | ... | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 136 | ... | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள் | ... | 5 |
| 4. | என் இளமைக்காலச் சிந்தனைகள் | ... | 7 |
| 5. | மாதம் ஒரு புத்தகம் | ... | 11 |
| 6. | யூத மதமும் யூதர்களும்- ஒரு சிறிய அறிமுகம் (தொடர்ச்சி) | ... | 13 |
| 7. | நாமமே இறைவன் | ... | 15 |
| 8. | மாலே மணிவண்ணா - 51 | ... | 18 |
| 9. | பிருந்தாவனமும் நந்தகுமாரனும் | ... | 20 |
| 10. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து-134 | ... | 23 |
| 11. | செய்திகள் | ... | 25 |
| 12. | நாமஸங்கீர்த்தன ஸத்சங்கச் செய்திகள் | ... | 30 |

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம்

ராகம்: பிருந்தாவன சாரங்கா தாளம் : ஆதி

**பல்லவி**

*தீப ஜோதியிலே வேங்கடேசன்!*
*துன்பம் தொலைத்திடுவான் வேங்கடேசன்! (தீப)*

**சரணங்கள்**

*தாமரைக் குளந்தனில் வேங்கடேசன்!*
*தாமதமின்றிக் காத்திடுவான் வேங்கடேசன் (தீப)*

*துளஸீ வனம் தன்னில் வேங்கடேசன்!*
*துயரம் தீர்த்திடுவான் வேங்கடேசன்! (தீப)*

*ஓதும் மறைதனில் வேங்கடேசன்!*
*ஓங்காரமாய் நின்றான் வேங்கடேசன்! (தீப)*

*அத்திமரம் தனில் வேங்கடேசன்!*
*சத்தியமாய் நிற்கின்றான் வேங்கடேசன்! (தீப)*

*பாடும் அடியாரிடையே வேங்கடேசன்*
*பாகவதராய் மறைந்து நின்றான் வேங்கடேசன் (தீப)*

**நாமாவளி**

சங்கசக்ரதர கோவிந்த பங்கஜநயன கோவிந்த
மங்கள விக்ரஹ கோவிந்த லங்கேச்வரஹர கோவிந்த
மங்காபுரபதே கோவிந்த கங்கணபூஷண கோவிந்த
சங்கர்ஷணரூப கோவிந்த கங்காபாத கோவிந்த

136

## நாம் காண விழையும் உலகம்

சமீபத்தில், நமது மதுரபுரி ஆஸ்ரமத்தில், ஸத்ஸங்கத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி, நாம மலர் பற்றி பேசினார்கள். அவை மிகவும் உணர்வு பூர்வமாக இருந்தமையால் அவற்றை எடுத்து எழுதுகின்றேன்.

''உலகம் முழுவதும் எல்லோருக்கும் கல்வி, உணவு, பொருளாதார வசதி, ஆரோக்கியம், சுகாதாரம் அமைதியான வாழ்க்கை, சம உரிமை இவைகள் ஏற்படவேண்டும் என்பதற்காக எவ்வளவோ பேர் தங்களுடைய வாழ்க்கையைத் தியாகம் செய்து கொண்டிருக்கிறார்கள். நாமோ, உலகத்தில் உள்ள ஒவ்வொருவர் இடத்திலும் உள்ள ஆன்ம சக்தியைத் தட்டி எழுப்ப முடியாதா? என்று பார்க்கின்றோம். இந்த ஆன்ம சக்தி கம்பீரமானது மட்டும் அல்ல; அமைதியானது; அன்பானது. ஒவ்வொருவருக்கும் இருக்கின்ற அந்த அன்பை வெளிக்கொணர்ந்துவிட்டால் உலகம் பூரணத்துவத்தை அடையும்.

சட்டம், பாவம், புண்ணியம், தெய்வம், நரகம் இவைகளுக்குக் கட்டுப்படும் மனிதன், இவைகளுக்காகவே மட்டும் பயந்து கட்டுப்பாட்டுடன் வாழ்கின்ற மனிதன் இயல்பாக நல்லவன் அல்லன். நன்மை என்பதனாலேயே நீ நல்லவனாக இருக்க வேண்டும். இதை அன்பு ஒன்றினாலேதான், அதாவது ஆன்மபலம் ஒன்றினாலேதான் சாதிக்கமுடியும். அத்தகைய அன்பை நாமாகவோ, கட்டளை போட்டோ, பலவந்தமாகவோ, மிரட்டியோ ஏற்படுத்த முடியாது. அன்பு, மலர் போன்றது; மென்மையானது; ஒரு மொட்டு விரிந்து தானாக வளரவேண்டுமே தவிர அதைவேறு எந்தவிதத்திலும் மலர வைக்கமுடியாது. பூமியில் விதை விதைக்கலாம்; உரம் போடலாம்; நீர் இடலாம். ஆனால், முளைவிடுவது என்பது தானாக நிகழக்கூடிய ஒன்று. அதுபோல், உலகத்தில் எல்லோரிடையேயும் ஆன்மீகச் சூழ்நிலையை ஏற்படுத்திவிட்டால் அந்த ஒவ்வொரு இதயத்தில் உள்ள அன்பு மலரை இறைவன் தானாகவே மலரச் செய்வான்.

ஆன்மீகம் என்பதை நினைத்து நாம் ஐயப்பட வேண்டாம். அன்பே உருவான கண்ணனின் நாமம் உலகம் முழுவதும் சூழுமானால் ஒவ்வொரு இதயத்திலும் அந்த அன்பு மலர்வதில் ஐயமென்ன? அந்த நாளை எதிர்பார்த்து ஒவ்வொருவருடைய நாவிலும் மஹாமந்திர கீர்த்தனம் மலர செய்வோம்'' என்று கூறினார்கள்.

**(தொடரும்)**

**- டாக்டர் ஆ. பாக்யநாதன்**

ஸ்ரீ ஹரி:

## ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் சந்நதி

மஹாரண்யம் கிராமம், மலைப்பட்டு B.O. படப்பை. P.O. 601 301.
ஸ்ரீ பெரும்புதூர். T.K. காஞ்சி மாவட்டம்

ஸகல மங்களங்களையும் அருளும் வரப்ரஸாதியான மஹாரண்யம் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் சந்நதியில் பக்தர்களின் பிரார்த்தனைகள், ஒவ்வொரு சனிக்கிழமையன்றும் காலையில் பெருமாளிடம் விண்ணப்பிக்கப்படுகின்றன.

பக்தர்கள், தங்களது பிரார்த்தனைகளை தபால் தலை ஒட்டிய உறைமீது ''பிரார்த்தனைப் பெட்டி'' என்று குறிப்பிட்டு அனுப்பினால், பிரசாதம் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

பிரார்த்தனைப் பெட்டியில் கண்டிப்பாகக் காணிக்கைகள் எதுவும் செலுத்தக்கூடாது. பிரார்த்தனைகள் மட்டுமே பிரார்த்தனைப் பெட்டியில் ஏற்றுக்கொள்ளப்படும்.

-ராதே க்ருஷ்ணா-

ஸ்ரீ ஹரி :

## ஸ்ரீ ப்ரேமிகவரதன் மருத்துவ முகாம், மஹாரண்யம், மதுரபுரி

ஸ்ரீ சாந்தீபனி குருகுலம் ட்ரஸ்ட், சென்னை சார்பில் ஸ்ரீ ப்ரேமிக வரதன் இலவச மருத்துவ முகாம், மஹாரண்யம், மதுரபுரியில் மார்ச் மாத எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் நடைபெற்றன.

**- Trustees**

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள்

***கேள்வி : மஹாமந்திர கீர்த்தனம் செய்வதால் மட்டும் ஞானத்தை அடைய முடியும் என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லையே?***

ஸ்ரீ ஸ்வாமிஜி : ஒருவருடன் நமக்கு நன்றாகப் பழக்கம் இருந்தால் அவரைச் சந்தோஷப்படுத்த என்ன செய்ய வேண்டும் என்று நமக்கு தெரியும் அல்லவா? அதுபோல், பகவானை நன்றாகப் புரிந்து கொண்ட மஹான்கள் அந்த பகவானை மஹாமந்திர கீர்த்தனம் சந்தோஷப்படுத்துவதுபோல் வேறு எதுவும் சந்தோஷப்படுத்துவது இல்லை என்று சொல்லிவிட்டுச் சென்று இருக்கின்றார்கள். ஒரு தாயாருக்கு, தன் குழந்தை மீது எப்பொழுதுமே பாசம் இருந்தாலும் அந்த குழந்தையின் சில செய்கைகளால் அந்தப் பாசம் சில சமயங்களில் பூரிப்பாக மாறுகின்றது அல்லவா! அதுபோல், தெய்வத்திற்கு நம் மீது எப்பொழுதும் கருணை இருந்தாலும் மஹாமந்திர கீர்த்தனம் செய்துகொண்டே இருந்தால் அது பூரிப்பாக மாறி, கருணையாக வடிவெடுக்கும். அப்படிக் கிருபையாக மாறும்பொழுது, அதுதான் ஞானம்.

***கேள்வி : உபநிடதம், பிரம்மசூத்ரம், பகவத்கீதை, J.K. அவர்களின் தத்துவம் இவைகளால் அடித்தளத்தில் உள்ள ஒருவனுக்கு என்ன பயன்?***

பதில் : பலர், கல்வி அறிவில்லாமல் இருக்கும்பொழுது, ஒருவர் மட்டும் பல ஆராய்ச்சிகளில் இறங்கி முயற்சி செய்வதால் படிக்காதவர் களுக்கு என்ன பயன் என்று கேட்க முடியுமா! படிக்காதவர்களும் படித்துவிட்டு வரும்பொழுது இந்த ஆராய்ச்சிகளும் அதன் பயனும் புரியுமல்லவா? ஆராய்ச்சியாளர்களின் கண்டுபிடிப்புகள் எல்லோருக்கும் பொதுதானே! அதன் பலன் எல்லோருக்கும் கிடைக்கும்தானே! அதுபோல், இந்த நூல்கள் மனோதர்மத்தைச் சொல்லக்கூடிய நூல்கள். மனிதனுக்கு உணவு, உடை, இருப்பிடம் இவைகளைவிட மன அமைதியே மிகவும் முக்கியம். அந்த மன அமைதியை இந்த நூல்கள் வழங்குவதே அவற்றிற்கு உள்ள பெருமை.

***கேள்வி : பகவத்கீதையில் ஞானம்தான் உயர்ந்த நிலை என்று சொல்லி இருக்கும்பொழுது, இறைவனுடைய நாமத்தைச் சொல்வதால் மட்டும் அந்த நிலை எப்படிச் சித்திக்கும்?***

பதில் : அதே பகவத்கீதையில் பகவான், 'சொல்பம் அபி அஸ்ய தர்மஸ்ய த்ராயதே மஹதோ பயாத்' என்று கூறியுள்ளான். சிறிய எளிமையான தர்மத்தைச் செய்தால்கூட, பெரிய பயத்தில் இருந்து உன்னைக் காப்பாற்றுகின்றேன் என்கிறான். சிறிய தர்மம் என்பது நாமகீர்த்தனமே. பெரிய பயம் அஞ்ஞானமே. அஞ்ஞானத்தின் அழிவு ஞானம்தான்.

## மனசாட்சி

ஒருவர், அவருடைய வீட்டில் தங்கியிருக்க நமக்கு அனுமதி கொடுத்ததோடு மட்டும்அல்லாமல், நமக்கு வேண்டிய வசதிகள் அனைத்தும் செய்துகொடுப்பாரானால், மனச்சாட்சி உள்ளவனுக்கு, 'இவ்வளவு நமக்குப் பார்த்து பார்த்துச் செய்யும் அவருக்கு, உபயோகமுள்ளபடியாக நாம் ஏதாவது செய்ய வேண்டும்' என்று நினைப்பான் அல்லவா!

அதுபோல், இந்த உலகமே நமக்குப் பகவான் கொடுத்துள்ள வீடு; அதில், நமக்கு வேண்டிய வசதிகளும் செய்து கொடுத்துள்ளான். அப்படியிருக்க, மனச்சாட்சி உள்ளவன், அவன் சந்தோஷப்படும்படியும் அவனுக்கு உபயோகமுள்ளதான, ஒரு காரியம் அவசியம் செய்ய வேண்டும் அல்லவா! அது என்னவென்றால், 'நாம் மஹாமந்திர கீர்த்தனம் செய்துகொண்டு பிறரையும் செய்ய வைக்க வேண்டியதுதான்' ஆகும்.

**- ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி**

**ஸ்ரீ ஸ்வாமிஜிக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை**

Personal Secretary to

**H.H. SRI SRI MURALIDHARA SWAMIJI**

New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83
Telephone : 044-24895875, email ID : contact@madhuramurali.org

என்னும் முகவரிக்கு அனுப்பவும்.

# என் இளமைக் காலச் சிந்தனைகள்

- ஸ்ரீ ஸ்வாமிஜி

ஒரு நாள், மாலை நேரத்தில் கடற்கரைக்குக் காற்று வாங்க சென்றிருந்தேன். சிறு குழந்தைகள் பட்டம் விட்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள். அந்தக் குழந்தைகளை அழைத்து வந்த பெரியவர்களின் கவனம் அந்தக் குழந்தைகளிடமே இருந்தது. குடும்பம் குடும்பமாகச் சிலர் கூடியிருந்து மகிழ அங்கு வந்து, சாப்பிட்டுக்கொண்டும், பேசிக்கொண்டும் இருந்தார்கள். காதலர்கள் தங்கள் உலகத்திற்குள்ளே ஆழ்ந்திருந்தார்கள். எங்குப் பார்த்தாலும் கடைகள், வண்ண விளக்குகள், பெரியவர்களைக் கவரப் பலவிதமான தின்பண்டங்கள், சுண்டல்கள்; சிறுவர்களைக் கவரப் பலவிதமான விளையாட்டுப் பொருட்கள். ஆங்காங்கு பிச்சையெடுக்கும் சிறுவர்கள், சுண்டல் விற்கும் சிறுவர்கள்... இவற்றையெல்லாம் கண்காணிக்கப் போலீஸ் வேறு!

நான் தனியாகச் சென்றிருந்ததால், கடற்கரையின் ஓரத்தில், அதாவது அலைகள் என் கால்களில் தொடுமாறு சென்று நின்றிருந்தேன். ஆகாயத்தில், நிலாவும், தொலைவில் ஒரு கப்பலும் தெரிந்தன. வெகுசிலரே, தங்களது குழந்தைகளுக்குக் கடலின் அலைகளைக் காட்ட, அதன் அருகில் அழைத்துச் சென்றிருந்தனர். நானும், எல்லோரையும்போல் வானத்தைப் பார்த்தேன், பூமியைப் பார்த்தேன் என்று போய்விடக்கூடாதா! என்னுடைய பொல்லாத மனம் என்னை இப்படி விடுவதில்லை. 'எந்தக் கடற்கரையின் மணலில் இவ்வளவு பேர் ஆனந்தமாக உல்லாசமாக இருக்கின்றார்களோ, அவர்களுக்கு இந்தக் கடலின் பெயர் என்ன? ஆழம் எவ்வளவு? கடலில் என்ன பொருட்கள் இருக்கின்றன? கடல் எப்படி ஓயாமல் அலைகளை வீசிக்கொண்டே இருக்கின்றது? என்ற கேள்விகள் வந்திருக்குமோ,' என்று என்னை நானே கேட்டுக்கொள்வேன்.

''சீச்சீ! உனக்கேன் இந்த வேலை? வந்தாயா, காற்று வாங்கிச் செல்வாயா, இது என்ன அதிகப்பிரசங்கித்தனம்?'' என்று எந்தன் அறிவு என்னை அடக்கியது. அன்று இரவு, அப்படியே சிந்தித்துக் கொண்டே ஆழ்ந்த தூக்கத்தில் சென்றுவிட்டேன்.

மறுநாள், ஒரு கிராமத்திற்குச் செல்ல நேரிட்டது. அந்தக் கிராமத்திலே விவசாயி நெல்லை அறுவடை செய்து களத்துமேட்டில் போட்டுவிட்டு வந்திருக்கின்றார். ஜில் என்று காற்று அடிக்கத் தொடங்கியவுடன் அவருக்குப் பயம் வந்தது, 'இரவில் மழை வருமோ?' என்று. உடனே, என் பக்கத்தில் வந்து நின்றுகொண்டு ஆகாயத்தைப் பார்க்க ஆரம்பித்தார். மேகம் இருக்கின்றதா? சந்திரன் தெரிகின்றதா? சந்திரனை மேகமூட்டம் மறைத்துவிட்டனவா? என்று பார்த்து, என்னையும் கொஞ்சம் பார்க்கச் சொன்னார். வானம் வெளுத்து இருந்ததால், மேகம் இல்லாததால், 'மழை வராது' என்று அவருக்கு தைரியம் கூறினேன். ஆனாலும், அவர் அவ்வப்போது வானத்தைப் பார்த்துக்கொண்டே என்னிடம் பேச்சுக் கொடுத்து வந்தார். 'வானத்தில் என்ன தெரிகின்றது?' என்று கேட்டேன் நான். 'மேகம் இல்லை! அவ்வளவுதான்!' என்றார். என்னுள் இருக்கும் அதிகப் பிரசங்கியோ, 'நல்ல நீல நிறமான வானத்தில் பல விண்மீன்கள் ஜொலிக்கின்றவே, அவற்றைப் பற்றியெல்லாம் ஏன் இவருக்குச் சிந்தனை வரவில்லை?' என்று கேள்வியை எழுப்பியது.

அதுபோல், அந்தக் கிராமத்து வயல்வெளியிலே நான் மதியம் நடந்து செல்லும்போது, ஓர் அபூர்வமான மரத்தைக் கண்டேன். அதனுடைய விதை கீழே விழுந்தால், தானே மரத்தில் வந்து ஒட்டிக்கொள்ளும். ''ஆங்கோலம்'' என்ற இந்த மரத்தைப் பற்றி வடமொழி நூல்களில் விசேஷமாகக் கூறப்பட்டிருக்கிறது. அதன் அடியிலே ஒரு வழிப்போக்கன் அமர்ந்து உணவு உட்கொண்டிருந்தார். அவரிடம் ஆசையுடன், 'இந்த மரத்தின் பெயர் உங்களுக்குத் தெரியுமா?' என்று என்னுள் உள்ள அதிகப்பிரசங்கி கேட்டது! 'யாருங்க அதையெல்லாம் கண்டாங்க' என்றவாறு அவர் நடையைக் கட்டினார்.

இந்த மூன்று சம்பவங்களும், இயல்பான மனிதனுடைய நிலையைத் தெரிவிக்கின்றது. ஆனால், நானோ இத்தகைய இயல்புகளிலிருந்து வேறுபட்டிருக்கின்றேன். அவர்கள் சரியா? அல்லது நான் சரியா? இதில் ஒருவர்தானே சரியாக இருக்க முடியும்! சிறு வயதாக நான் இருக்கும்பொழுதே, கடலூரில் உள்ள விளையாட்டுப் பூங்காவிற்கு, நண்பர்களுடன் செல்வேன். அவர்கள்

விளையாடிக்கொண்டிருக்கும்போது, திடும் என்று அவர்களைப் பிரிந்து, பூங்காவில் அமருவதற்கு என்று நிறுவப்பட்ட சாய் நாற்காலியில் உட்கார்ந்துவிடுவேன். திடும் என்று, எனக்குள் கேள்விகள் எழும். நாம் வாழ்க்கையில் பிறந்திருக்கின்றோமே, அதனுடைய குறிக்கோள் (Purpose) என்ன? எதற்காக நாம் பிறந்துள்ளோம்? எதற்காக இவ்வளவு மனிதர்கள் பிறந்து இருக்கின்றனர்? வாழ்வதற்காகத்தான் பிறந்திருக்கின்றார்கள் என்றால், பலரது வாழ்க்கையில் இன்பம் இல்லையே! கண் தெரியாதவர்கள், காது கேட்காதவர்கள், புத்தி பேதலித்தவர்கள் என்று பலரைக் காண்கின்றோம். உலகத்தில் அவர்கள் எப்படி வாழ்வார்கள். அவர்களுக்கெல்லாம் உலகம் எங்கே? எல்லோரும் வாழ்வதற்காகவே பிறந்துள்ளார்கள் என்பது அவர்கள் விஷயத்தில் எப்படி பொருந்தும்?

அப்பொழுது ஒரு நாய், நான் ஏதாவது சாப்பிட போடுவேன் என்று, நாக்கைத் தொங்கப்போட்டுக்கொண்டு, வாலை ஆட்டிக் கொண்டு என் முன் நின்றிருந்தது. அது தெருவில் சுற்றும் நாயாக இருந்ததால் உடல் முழுக்க சொறி, மற்ற நாய்கள் கடித்த காயம் வேறு! இந்த நாயை எதற்காகப் படைத்தான்? அதன் வாழ்க்கைக் குறிக்கோள் என்ன? அந்தப் பூங்காவிலே வண்ணத்துப் பூச்சிகள், கொசுக்கள், புற்களில் படரும் புழுக்கள் இவைகளைக் கண்ணுற்று அந்தக் கேள்வி மீண்டும் எழுந்தது; இவைகள் ஏன் பிறந்தன? அவைகளுடைய பிறப்பின் குறிக்கோள் என்ன? இத்தகைய கேள்விகள் எழுந்ததால் நான் உடனே வீட்டிற்குக் கிளம்பிவிட்டேன்.

நண்பர்களெல்லாம், நான் ஏதோ வருத்தத்தில் இருப்பதாக நினைத்துக்கொண்டார்கள். போகும் வழியிலே, பெரிய பாரத்தை இழுக்கமுடியாமல் இழுத்தும், வண்டிக்காரனிடம் சாட்டை அடி வாங்கும் மாட்டைக் கண்டவுடன், அப்படியே என் மனம் வேதனையில் தத்தளித்தது. வீட்டிற்கு வரும்போது, பல வீடுகளின் வாசலிலே பிச்சைக்காரர்கள் பிச்சை கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஒரு வீட்டின் வாசலிலே நின்றிருந்த ஒருவர், மற்றொருவரிடம், தான் எப்படி இன்று வேலைக்காரனை ஏமாற்றி, குறைந்த கூலியில், பெரும்வேலை வாங்கினேன் என்று பெருமையைப் பேசிக் கொண்டிருந்தார்.

இவைகள் எல்லாம் என் மனதை ஆட்டிப் படைத்தன. இவைகளுக்கு எல்லாம் காரணம் இறைவன் என்று, சிறு வயதிலிருந்தே நமக்குக் கற்றுக்கொடுக்கும் பாடம் அல்லவா! நான் இறைவனை எப்படிக் கற்பனை செய்து இருந்தேன் என்றால், 'என் பள்ளி ஆசிரியரைவிடப் பெரியவர்' என்று. ஏன் என்றால், எனது பள்ளி ஆசிரியர் 'நல்லது செய்தால் பரிசு தருவார், தவறு செய்தால் தண்டிப்பார். அப்படித்தானே இறைவனும்!' அன்று உணவு அருந்தத் தோன்றவில்லை. படுத்துக்கொண்டேன். மனதில் பல வேதனை, மூளையில் பல கேள்விகள். உறக்கம் எப்படி வரும்!

எல்லோரும் உறங்கியபிறகு, எழுந்து மொட்டை மாடிக்குச் சென்றேன். வழக்கமாக இருட்டிலே மொட்டைமாடிக்குச் செல்லப் பயப்படும் நான், அன்று ஏனோ பயமே இல்லை. நள்ளிரவைத் தாண்டிய நேரமது! ஓரிடத்தில் சென்று அமர்ந்து, தனிமையில் கண்களை மூடிக்கொண்டு, 'இறைவா! உன்னிடம் கேட்க வேண்டிய கேள்விகள் சில உண்டு. அதற்குத் தயவுகூர்ந்து பதில் சொல்வாயா' என்று பிரார்த்தனை செய்துகொண்டேன். பறவைகளின் சத்தமும், அக்கம் பக்கத்திலுள்ள வீடுகளில் வாசல் தெளிக்கும் சப்தத்தையும் கேட்டு, பொழுது புலர்ந்துவிட்டதை உணர்ந்தேன். எவ்வளவு நேரம் அப்படியே உட்கார்ந்து இருந்தேன் என்று எனக்கே தெரியவில்லை. எனக்கு உறக்கமும் வரவில்லை, இறைவனும் வரவில்லை.

கீழிருந்து 'நான் எங்கே?' என்று ஒருவருக்கொருவர் விசாரிக்கும் சப்தம் கேட்டதால், நான் பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று கீழே இறங்கி வந்துவிட்டேன்.

'இறைவனாலே பதில் சொல்ல முடியாத பல கேள்விகள் எல்லாம் என்னிடம் இருந்ததாலேயே, இறைவன் என்முன் வரவில்லை' என்று நினைத்துக்கொண்டேன். ஆனால், நான் எல்லா வேலைகளிலும் ஈடுபட்டிருந்தபோதும்கூட இந்தக் கேள்வி ஓடிக்கொண்டே இருந்தது. என்னுடைய தாயார் என்னைப் பார்த்து, 'இரவில் நீ சாப்பிடவில்லையா? வயிறு ரணமாகிவிடும்!' என்றாள். 'இதென்ன! நம்முடைய வயிற்றையோ, நுரையீரலையோ, இதயத்தையோ கூட நம்மாலேயே பார்க்க முடியவில்லை. அவை எப்போதும் நம் கண்முன் இருந்துகொண்டிருந்தால் அவைகள் சரியாக இருக்கின்றனவா என்று நாமே பார்த்துத் தெரிந்து கொள்ளலாமே!' என்று நினைத்தேன்.

**(தொடரும்)**

# மாதம் ஒரு புத்தகம்

வேத, சாஸ்திர, சம்பிரதாயங்கள், மதக்கோட்பாடுகள் என்று எந்த ஒரு விஷயத்தையும் பின்பற்றாமல், எவரோ ஒருவர் சொல்கிறார் என்று ஒப்புக்கொள்ளாமல், நம்பிக்கை என்ற வட்டத்திற்குள் அடங்கிவிடாமல், உண்மையை உணர வேண்டும் என்ற தீவிரமான ஒருமுகப்பட்ட நோக்கத்துடன் முனைந்து உன்னதமான ஞானநிலையை அடைந்த ஸ்ரீ J. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் வாழ்க்கையை வர்ணிக்கும் 'LIFE AND DEATH OF KRISHNAMURTHI - MARY LUTYENS' என்ற புத்தகம் மிகவும் சுவாரஸ்யமானது.

சிறுவயது முதல் அன்னி பெசன்ட் (ANNIE BESANT) அம்மையாரின் அரவணைப்பில், தியோசாபிகல் சொசைட்டியின் (Theosophical society) நடு நாயகமாக விளங்கிய திரு.கிருஷ்ணாஜி, தான் உண்மையை உணர்ந்தபின் தன்னுள் பெருகிவந்த ஆனந்த வெள்ளத்தை எல்லோருடனும் பகிர்ந்து கொள்ள, தன்னைச் சுற்றியிருந்த எல்லாத் தளைகளையும் ஒரு நொடியில் தகர்த்து எறிந்து விட்டு, THEOSOPHICAL SOCIETYயையும் துறந்தார்.

''உண்மையை எவரும் எவருக்கும் புகட்ட முடியாது. அது ஒவ்வொருவரும் தானே முயன்று அறிய வேண்டிய விஷயம். உண்மையைக் காண்பிக்க முற்படும் ஸ்தாபனங்கள்கூட அதை அடைவதற்குத் தடைகளே!'' என்று அவர் உறுதியாக நம்பியதால், சிறு தயக்கமும் இன்றி ஒரு நொடியில், THEOSOPHICAL SOCIETY யின் அங்கமாக, கிருஷ்ணாஜியின் கருத்துக்களைப் பரப்பப் பல நாடுகளில் ஏற்படுத்தப்பட்ட 'ORDER OF THE STAR' என்ற மாபெரும் உலகளாவிய அமைப்பை 1929-ஆம் வருடம் கலைத்துவிட்டுச் சுதந்திரமாகக் கிளம்பிவிட்டார்.

அப்பொழுது அவர் பேசிய பேச்சு வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது. "TRUTH IS A PATHLESS LAND!" என்று துவங்கும் அந்தப் பேச்சில் அவர் 'உண்மை என்பதை ஒரு குறிப்பிட்ட பாதையில் சென்றுதான் அடையமுடியும் என்று கூறவே முடியாது. நம்பிக்கை, உண்மை என்பது அவரவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் அனுபவத்தில் வரவேண்டியது. அதை ஒருவர் மேல் திணிக்க முற்பட்டால், அதற்குப் பெயர் 'நம்பிக்கை' இல்லை.

அப்படிச் செய்தால், அதுவே உண்மையை அடைய ஒரு தடையாகி விடும்' என்ற அவரது வார்த்தைகள் வரலாற்றில் ஓர் அழியாச் சுவட்டைப் பதித்துவிட்டன. **– டாக்டர் ஆ. பாக்யநாதன்**


ஸ்ரீ ஹரி:

**ஸ்ரீ ஸ்வாமிஜியின் நூல்கள் :**

ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரைகள், துளஸீ தளங்கள்

**H.H. Sri Sri Muralidhara Swamiji's discourse series in Tamil : Cassettes, Audio CDs, VCDs**

| | |
|---|---|
| 1. நாம மஹிமை | Audio CD |
| 2. ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸர் | Cassettes, Audio CDs |
| 3. திருவலம் ஸ்வாமிகள் | Cassettes, Audio CDs |
| 4. பாம்பன் ஸ்வாமிகள் | Cassettes, Audio CDs |
| 5. கலிகால உசிதம் தர்மம் - 2007 புத்தாண்டில் ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரை (தமிழில்) | Cassette, Audio CD |
| 6. மஹாமந்திர கூட்டுப்பிரார்த்தனை (தமிழில்) | VCD |
| 7. MahaMantra Mass Prayer - 2007 (Clippings of H.H. Sri Sri Swamiji's talk in Tamil with captions in English) | VCD |

**கீர்த்தனங்கள் :**

| | |
|---|---|
| 1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனங்கள் | Cassettes, Audio CDs |
| 2. மஹாமந்திரம்-அகண்ட நாமகீர்த்தனம் | Cassette, Audio CD |
| 3. ஸ்ரீ ஸ்வாமிஜி அருளிய 'கலிதர்மஉந்தியார்' | Cassette, Audio CD |
| 4. மஹாமந்திர கீர்த்தனம் -ஸ்ரீ ஸ்வாமிஜியின் மதுரமான குரலில் | Cassette, Audio CD |
| 5. பஞ்ச கீதங்கள் | Cassette, Audio CD |
| H.H. Sri Sri Muralidhara Swamiji's 'Kali Dharma Undhiyar' (Lecture in English) by Dr. A. Bhagyanathan (Live Recording) | MP3, Audio, CD |

**கிடைக்குமிடம் :**

**CHAITANYA MAHAPRABHU NAMABHIKSHA KENDRA,**

*Admin. Office :* New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 600 083 Phone : 044-24895875

For queries regarding, Madhuramurali, Books, Audio tapes & CDs kindly send e-mail to "publications@madhuramurali.org"

# யூத மதமும், யூதர்களும் - ஒரு சிறிய அறிமுகம்

*- சென்ற இதழ் தொடர்ச்சி*

*மதுரமுரளியில் நம் ஸனாதன மதத்தைப் பற்றிய பல அரிய விஷயங்கள் மற்றும் வேதம், இதிஹாஸம், புராணம் இவற்றின் சாரம் முதலியவை ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருள்மொழிகள் பகுதியில் இடம் பெற்று வந்துள்ளன.*

*'உலகின் புராதனமான மற்ற மதங்கள், கலாசாரங்கள் பற்றியும் ஒரு சிறிய அறிமுகம் நம் மதுரமுரளியில் இடம் பெறவேண்டும்' என்பது ஸ்ரீ ஸ்வாமிஜியின் அவா. அதன்படி யூதமதத்தைப் பற்றிய ஒரு சிறிய அறிமுகத்தை டாக்டர் ஆ. பாக்யநாதன் கொடுத்திருக்கின்றார். - ஆசிரியர்*

நமது மதத்திலுள்ளது போலவே, யூத மதத்திலும் வாழ்வின் முக்கியமான நிகழ்வுகள் மதரீதியாகவும் கொண்டாடப்படுகின்றன. அதற்குச் சில உதாரணங்களைப் பார்ப்போமா?

**ப்ரிட் மிலா (BRIT MILAH) செவெட் ஹாபட் (ZEVED HABAT)**

இந்த மதச்சடங்கின் நோக்கம் பிறந்த குழந்தைகளை வரவேற்பது, ஆண் குழந்தைகளுக்குச் செய்யப்படும் சடங்கிற்கு BRIT MILAH என்றும், பெண் குழந்தைகளுக்குச் செய்யப்படும் சடங்கிற்கு ZEVED HABAT என்றும் பெயர். குழந்தை பிறந்து எட்டாவது நாள் செய்யப்படும் இந்தச் சடங்கின்பொழுது ஒவ்வொரு குழந்தைக்கும் ஹீப்ரூவில் (HEBREW) பெயர் சூட்டப்படுகின்றது.

**பார் மிட்ஸ்வா (BAR MITZVAH) பாட் மிட்ஸ்வா (BAT MITZVAH)**

இந்தச் சடங்கு குழந்தைகள் பக்குவமடைந்து வாலிபர்களானதைக் கொண்டாடுவதே ஆகும். அந்தச் சுபதினத்தன்று அந்த இளைய தலைமுறையினரை வழிபாட்டுக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கச் செய்து, 'TORAH' விலிருந்து ஒரு பகுதியைப் படிக்கச் செய்வது வழக்கம்.

**திருமணம் :**

திருமணம் யூதர்களின் வாழ்வில் ஒரு மிக முக்கியமான நிகழ்ச்சி. மணமக்கள் இருவரும் 'CHUPAH' என்ற ஒரு அழகான

விதானத்திற்குக் கீழே அமர்ந்துகொள்வார்கள். அந்த அழகான விதானம், சந்தோஷமான இல்லத்தைக் குறிக்கும் என்பது யூதர்களின் நம்பிக்கை. திருமணத்தின் முடிவில், மணமகன் தனது காலினால் கண்ணாடியை உடைப்பார். அப்படிச் செய்வதன் நோக்கம், பல அந்நியப் படையெடுப்புகளாலும், ஆக்கிரமிப்புகளாலும் உலகெங்கும் சிதறிவிட்ட யூதர்களின் நிலையை நினைவுகூறுவதே!

**இறப்பு-நீத்தார் கடன் : (DEATH/MOURNING)**

யூதமதத்தில் இறந்தவர்களுக்குச் செய்யும் சடங்குகள் மிகவும் விரிவாகப் பல நிலைகளில் சொல்லப்பட்டுள்ளன. முதல் ஏழு நாட்களுக்கு, SHIV'AH என்று பெயர். அந்த ஒரு வாரத்தில் வீட்டை விட்டு வெளியே செல்லமாட்டார்கள். உறவினர்களும், நண்பர்களும் வந்து ஆறுதல் சொல்வது வழக்கம்.

அடுத்த கட்டமாக, ஒரு மாதத்திற்கு SHLOSHIM என்பது அனுஷ்டிக்கப்படுகின்றது. இறந்தவர்கள் பெற்றோராக இருந்தால், A VELUT YUD BET CHODESH என்ற சடங்கு பதினொரு மாதங்களுக்குப் பின்பற்றப்படுகின்றது.

இவற்றையெல்லாம் பார்க்கும்பொழுது நமது ஸனாதன தர்மத்திற்கும் யூத மதச் சடங்குகளுக்கும் பல ஒற்றுமைகள் இருப்பதைக் காண முடிகின்றது.

*Sri Hari :*

*Pranams to the Lotus feet of*
**H.H. SRI SRI MURALIDHARA SWAMIJI**

**M/s. BUDDIES INFOTECH PRIVATE LIMITED**

*Web Designing and Application Development*

Old No. 22, New No. 34, Sriman Srinivasa Road,
Alwarpet, Chennai - 600 018. Phone No. 044-421 44 662
e-mail : contact@buddiesinfotech.com

# நாமமே இறைவன்

**- ஸ்வாமி ராம்தாஸ்**

இறைவனும், அவருடைய திருநாமமும் வெவ்வேறு அல்ல. திருநாமம் இறைவனே! அவருடைய திருநாமம் மனதில் தோன்றியவுடன், உள்ளம் இறைவனின் சான்னித்தியத்தால் நிரம்புகிறது. நமது சிந்தனைகளை இறைவன்பால் நிறுத்த, அவருடைய திருநாமத்தை இடையறாமல் நினைவு கூர்வதைவிட எளிமையான வழி வேறெதுவும் இல்லை. இறைவனின் திருநாமத்தை உரக்க ஜபம் செய்யும்போது, நமது இதயத்தில் பிரேமை எனும் வெள்ளம் பெருக்கெடுத்துப் பரவசநிலை அடைவதை உணர்கிறோம். ஏனெனில், திருநாமத்தின் ஒலி நம் மனதை விழிப்புறச் செய்து இறைவனின் அன்பையும், பேரானந்தத்தையும் உணரச் செய்கிறது.

இறைவனின் திவ்யநாமத்தை உரக்கச் சொல்வதைவிட மனதில் ஜபம் செய்வது மிகச் சிறந்ததாயினும், நாமத்தை உரக்கச் சொல்வதால் எழும் இனிமையும், ஆனந்தமும் ஒப்பிடகரிய அனுபவம் ஆகும். பக்தனின் மனம் இசையில் லயிக்கும்போது மெய்சிலிர்த்து அவனுக்கு நாமமே பிரும்மம் என்ற அனுபவம் கிட்டுகிறது. இறைவன் சிருஷ்டிக்கு உட்பட்டவரும், அதே சமயம் சிருஷ்டிக்கு அப்பாற்பட்டவரும் ஆவார். திருநாமம் இத்தகைய இறைவனைக் குறிக்கிறது. இங்கு, எங்கும் நிறைந்த, எல்லையற்ற, மாற்றமே இல்லாத, அமைதியான தத்துவமே சிருஷ்டிக்கு அப்பாற் பட்ட இறைவன் ஆகும். நாம, ரூப, சலனங்கள் கூடிய, அனைத்து ஜீவராசிகளையும், வஸ்துக்களையும் அகத்தே உடைய இந்தப் பிரபஞ்சமே இறைவனின் சிருஷ்டிக்கு உட்பட்ட அம்சம் ஆகும். திருநாமம் எல்லாவற்றையும் தன்னுள்ளடக்கி, அதேசமயம், எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டதாகி, தனித்துவமும், தனித்துவத்திற்கு அப்பாற்பட்டதுமாகிய இறைவனையும் குறிக்கிறது.

இத்தகைய திவ்யநாமம் அனைத்துச் சிருஷ்டிகளுக்கும் ஆதியே இல்லாத மூலகாரணமும், அதே சமயத்தில் சிருஷ்டியுமாகும். பூரணப் பொருளாகிய கடவுள் அநாமியாகிய நாமமே.

திருநாமம் ஜீவனைப் பந்தத்திலிருந்து விடுவிக்கிறது. திருநாமம் அவனை ஆன்மீக வாழ்வின் உச்சநிலைக்கு இட்டுச்செல்கிறது. இருளில் மூழ்கிய குருட்டு ஜீவனுக்குத் திவ்ய திருஷ்டியை அளிக்கிறது. இறைவனின் திருநாமம் உன்னதம் பொருந்திய விஸ்வரூப தரிசனத்தை அளிக்க வல்லது. திவ்யநாமம் ஜீவனைச் சிந்தனைக்கு எட்டாத இறையனுபூதி எனும் மகோன்னத சிகரத்திற்கு உயர்த்த வல்லது.

இறைவனின் திருநாமத்தின் சக்தி வெல்ல முடியாதது. வெல்லற்கரியது என்று கருதப்படும் மனம், நாமத்தின் இதமான இசையால் ஈர்க்கப்பட்டு, பணிவுள்ளதாகவும், மென்மையாகவும், இணக்கமுள்ளதாகவும் மாறுகிறது. நாம மகிமையால் மனமே இறைவனாக மாறுகிறது. இறைவனின் திருநாமத்தில் தஞ்சம் அடைந்தவன் பல அதிசயங்களை ஆற்ற முடியும். அவன் இயற்கையின் சக்திகளை வென்று மனித ஜீவன்களின் மனதில் ஆன்மீக எழுச்சியை ஏற்படுத்த முடியும். திவ்யநாமம் மனித ஜீவனை நித்யானந்த, பிரேம ஸ்பரூவமாக மாற்ற முடியும். நாமம் ஒரு தனிப்பட்ட ஜீவனை விராட் ஸ்வரூபனாக (cosmic reality)- அறிவிலியான ஜீவனை இறைவனாக-மாற்ற முடியும்.

திவ்யநாம பஜனை செய்யும் இடத்தில், நாமத்தின் இசைநயம் பிரேமையின் மகிமையைப் பரப்பி, அந்தச் சூழ்நிலையைத் தூய்மை, அமைதி, பேரானந்தம் ஆகியவற்றால் நிரம்பச் செய்கிறது. திவ்ய நாமம் பூரணத்துவம் பொருந்தியது. நாமத்தைச் சொல்வதே தியானம். அதனால் ஏற்படும் பரவச நிலையே சமாதி. திவ்யநாமம்தான் அன்பு, ஒளி, சக்தி, பேரானந்தம். வேறு எந்தச் சாதனையின் உதவியுமின்றி, நாமம் ஒன்றே ஒருவனுக்கு எங்கும் இறைவனுடைய தரிசனத்தை அளிக்க வல்லது. நாமமே ஒருவனுக்கு முடிவே இல்லாத அன்பு, ஆனந்தம் எனும் கடலில் சங்கமமாவதற்குப் போதுமானது என்ற கூற்றுக்கு இந்த எழுத்தாளன் உறுதி அளிக்க முடியும். இறைவனின் திவ்யநாமத்தைப் போல் அனைவரும் ஒருங்கே பின்பற்றக் கூடியதும், அதே சமயம் இறைவனை அடைய எளியதுமாகிய சாதனை முறை வேறு எதுவுமில்லை. ஒரு மகான் கூறியுள்ளதுபோல், எவருடைய நாவில் எப்போதும் இறைவனின் திவ்யநாமம் குடிகொண்டுள்ளதோ அவரே பந்தத்திலிருந்து விடுபட்டவர் அல்லது ஜீவன்முக்தர் என்பது உண்மையான கூற்றே.

எனவே, அருமைத் தோழர்களே! நீங்கள் எந்த இனம், குலம், கோட்பாடு அல்லது நிறத்தைச் சார்ந்தவராயினும், இறைவன் நாமத்தை ஏற்றி, அதன் இனிய உறவை உணர்ந்துகொள்ளுங்கள். நாமம் எனும் அமுதத்தில் இடையறாமல் மூழ்கும் உங்கள் ஆன்மா தூய்மையுறுவது மட்டுமல்லாமல், யாவுமறிந்த, எங்கும் நிறைந்த இறைவனின் பேரொளியாலும், அன்பாலும் பிரகாசிக்கும் என்பது உறுதி. திவ்யநாமத்தை இடையறாமல் ஓதும் பயிற்சி, கீழ்ப்படியாமல் நிற்கும் மனதை இறைவனின் திருச்சித்தத்திற்கும், வல்லமைக்கும் அடிமையாக்குகிறது. முதலில் திருநாமத்தை ஒருவன் சிரத்தை, நம்பிக்கை, ஒருமனப்பாடு ஆகியவற்றுடன் ஜபம் செய்யும்போது, முகமும், சரீரமும் ஒரு அசாதாரண ஒளியுடன் பிரகாசிக்கிறது. அவனுடைய மனம் விவேகத்தாலும், இதயம் அன்பாலும் நிரம்புகிறது. இவை யாவும் சாதகனின் மனதில் ஸத்வ குணம் மேலோங்குவதால் ஏற்படுகின்றன. பின்னர், நாமஜபத்தை அதே உற்சாகத்துடன் பின்பற்றும்போது, அவன் இந்தப் பிரபஞ்சம் அனைத்தையும் இறைவனின் உருவமாகக் காண்கிறான். இறைவனுடன் ஒருமித்து அவன் எங்கும் இறைவனின் தரிசனத்தையே காண்கிறான்.

**நன்றி – 'ஆனந்தாஸ்ரமம்',**
காஞ்சசங்காடு

**அவரவர்களுக்குத் தெரிந்த மொழியில் இறைவனை வழிபடுவதே உயர்ந்ததாகும். அப்பொழுதுதான் தன்னுடைய ஹ்ருதயத்தில் உள்ள எண்ணங்களை நன்றாக வெளிப்படுத்த முடியும். தமிழில், இறைவனை வழிபடுவது தவறு என்றால் நாயன்மார்கள், ஆழ்வார்கள், அருணகிரிநாதர், அபிராமிபட்டர், குமரகுருபரர், இராமலிங்க வள்ளலார், நக்கீரர் மற்றும் எவ்வளவோ அடியார்களின் கதையும் பொய் என்றாகிவிடும். மற்ற மதங்களைத் தமிழ் மொழியில்தான் வழிபாடு செய்ய வேண்டும் என்று கட்டாயப்படுத்த முடியுமா? என்ற வாதம் தேவையில்லாதது. 99.99% மக்களுக்குத் தெரியாத மொழியில்தான் வழிபாடுகள் நடைபெறும் என்பது பிடிவாதமே! எந்த மொழியில் சொல்லி வழிபாடு செய்கின்றார்களோ அவர்களுக்கே அதன் பொருள் என்ன? என்று தெரிந்து இருக்காது. அந்த மொழியின் அ, ஆ கூடப் பெரும்பாலும் தெரியாது. அப்படியிருக்க, இவைகள் வெறும் சடங்கே! எந்த மதத்தைச் சேர்ந்தவர்களானாலும் பெரும்பாலானவர்களின் எண்ணத்தைப் பிரதிபலித்தே வழிபாடுகள் அமைய வேண்டும்; வீணான பிடிவாதம் வறட்டுத்தனமே!**

– ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி

# மாலே மணிவண்ணா - 51

- மஹாவித்துவான் மயிலம் வே. சிவசுப்பிரமணியன்

இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழிலும் சிறந்துள்ள பகவானை முத்தமிழிலும் சிறந்தவர்களாய பெரியோர்கள் பரவுவது இயல்புதானே! இதனை நம்மாழ்வார் ஒரு திருவாய்மொழிப் பாசுரத்தில் அற்புதமாகச் சொல்லி பரவுகிறார்.

*''பாலேய் தமிழர் இசைகாரர் பத்தர் பரவும் ஆயிரத்தின்''*

(திருவாய் 1:5-11)

என்பது ஆழ்வார் வாக்கு. எம்பெருமானைப் பாடுகின்ற திருவாய் மொழியைப் பாலேய் தமிழர் ஆகிய இயற்றமிழ் வாணர்கள் பரவுகிறார்கள். பகுதி பொருந்திய தமிழ் இயற்றமிழ். எழுத்து, சொல், பொருள் என்று முப்பகுதிகளை உடையது இயற்றமிழ். பின்னாளில் பொருளிலே பொருந்திய யாப்பு, அணி என்ற இரண்டையும் தனியே செய்து ஐந்து பகுதிகளை உடையதாக இயற்றமிழ் செய்யப் பெற்றது.

'இசைகாரர்' என்பதால் இசைத் தமிழ் வல்லுநர்கள் பரவுகின்றனர் என்றார். 'பத்தர்' என்பது நாடக நாட்டியத் தமிழில் வல்லுநர்களைக் குறிக்கும் சொல்லாகும். முன்னர், இயலும் இசையும் சொல்லப் பெற்றமையால் இயைபு நோக்கி மூன்றாவதாக உள்ள பத்தர் நாடகத் துறையினரைக் குறித்ததாயிற்று. பத்தர் என்பர் மீதூர்ந்த பக்தியினால் தம்மை மறந்து இறைவன் திருநாமத்தை இடையறாது சொல்லி ஆடியும் பாடியும் மகிழ்பவர் ஆவர்.

'மணிவாசகர் ''ஆடுகின்றிலை'' என்பார். (திருவாசகம் திருச்சதகம் 31) சிவஞான சித்தியாரில்

*''ஆசையுடன் அரன் அடியார் அடியாரை அடைந்திட்டு*
*அவர் கருமம் உன்கருமம் ஆகச்செய்து*
*கூசிமொழிந்து அருள் ஞானக்குறியில் நின்று*
*கும்பிட்டுத் தட்டம் இட்டுக் கூத்தாடித் திரியே''*

(சிவஞான சித்தியர் 323)

என்று இப்பத்தர் செயலைக் கூறுவதும் காண்க.

('தட்டம் இடுதல்' தட்டா மாலை போலச் சுற்றுதலாகும்)

கூத்தாடுதல் என்பதனையே திருவாய்மொழியில்,

*''குழாங்களாய் அடியாருடன் கூடிநின்று ஆடுமினே''*

(திருவாய் 2:3-11)

என்று கூறினார். எனவே, பத்தாவார் ஆடிப்பாடித் தம்மை மறந்து இறைவன் திருநாமச் சுவையில் மூழ்கியிருப்போர் என்பதே கருத்தாம்-இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழுக்கும் உரிய பகவானைப் பரவும் நூல்களை முத்தமிழும் வல்லவர்கள் பரவுகின்றார் என்று நம்மாழ்வார் கூறியதும் பகவானுக்கு முத்தமிழில் உள்ள ஆர்வ மிகுதியைச் சுட்டுவதே ஆகும்.

முத்தமிழ் வித்தகனாகவும் தொல் இயல் புலவனாகவும் விளங்கும் பெருமான் பரிபாடல் ஆசிரியரால், ''மாலைச் செல்வ'' என்றும் ''தோலாக் கோட்ட'' என்றும் அடுத்துத் தோத்திரம் செய்யப் படுகிறான். தமிழறிந்த பெருமான் மாபெரும் சபைகளில் முதன்மையாகத் தலைமைப் புலவனாக விளங்குகின்ற போது அனைவரும் அவனுக்கு மாலை அணிவித்து மகிழ்வார்கள் அல்லவா? அதனையே 'மாலைச் செல்வத்தை உடையவனே' என்று தோத்திரமாக ஆக்கினார்.

சூடிக் கொடுத்த சுடர்க்கொடியாகிய ஆண்டாள் அணிந்து தந்த மாலையை அணிவதில் பெருவிருப்பம் உடையவனாக நெகிழ்ந்து காட்டியவன் பகவான். இத்தகைய நெகிழ்வு ஆண்டாள் திருவவதாரத்துக்கு நெடுங்காலம் முன்னரே பகவானுக்கு உண்டு என்பதைக் காட்டி நிற்கிறது 'மாலைச் செல்வ' என்கின்ற இத்தோத்திரம்.

'வனமாலையை (வனமாலை-துளசிமாலை) அணிந்த செல்வனே! எனப் பொருள் கூறலும் பொருந்துவதே. மாலையாகிய செல்வத்தை உடையவன் என்றும் மாலையை அணிந்த செல்வன் அவன் என்றும் இருவகையாகப் பொருள்படும் அரிய திருநாமம் இது.

(தொடரும்)

# பிருந்தாவனமும் நந்தகுமாரனும்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

மாதவதாஸ்பாபா கதவைத் திறந்தார். அங்கு ஒரு சிறிய பெண் கையில் பூரி, கச்சோரி, பாயசம் போன்ற பலவகை தின்பண்டங்கள் நிறைந்த தட்டுடன் நிற்பதைக் கண்டார். அவள் பாபாவிடம், 'பாபா! நீங்கள் இன்று மதுகரிக்குச் செல்லவில்லை அல்லவா? அதனால், என் அம்மா, உங்களுக்கு இவற்றைக் கொடுத்துவிட்டு வரச் சொன்னார். நீங்கள் இதைச் சாப்பிடவேண்டும்' என்று கூறினாள். அந்தச் சிறுமி, பாபாவிற்குத் தெரிந்த பெண்தான். ஆனால், அவள் முகத்தில் என்றுமில்லாத ஒரு பொலிவு அன்று இருந்தது.

விரஜவாசிகள், மதுகரியில் சாதுக்கள் உண்ணும் உணவைப் பெற மிகவும் விரும்புவார்கள். அதை மஹாபிரசாதமாக அவர்கள் கருதுவார்கள். இதை அறிந்த மாதவதாஸ், அச்சிறுமிக்கும் அந்த உணவின் ஒரு பகுதியை அளித்தார். அந்தச் சிறுமியோ, ''வேண்டாம் பாபா; இன்று என் உறவினர் வீட்டில் நான் நன்கு சாப்பிட்டு விட்டேன். இதற்கு மேல் என்னால் சாப்பிடவே முடியாது'', என்று கூறினாள். இதைக் கூறிவிட்டு அவள் சென்றுவிட்டாள். பாபா, அந்த உணவைச் சாப்பிட ஆரம்பித்தார். அதன் மணமும் சுவையும் அலௌகிகமாக இருப்பதைக் கண்டு வியந்தார். மீண்டும், அதை உண்ண அவருக்கு சாத்விக **பா**வ லக்ஷணங்கள் தோன்ற ஆரம்பித்தன. அச்சிறுமியின் வீட்டிலிருந்து இதற்கு முன்பு பலமுறை அவர் பிக்ஷை வாங்கி அருந்தியிருந்தார். ஆனால், அவருக்கு இப்படி ஒரு அனுபவம் எதுவும் இதுவரை ஏற்படதில்லை.

அந்தச் சிறுமியின் முகத்தில் இருந்த திவ்ய ஒளியும், அவளின் ம்ருதுவான ப்ரேமை நிறைந்த பார்வையையும் நினைவு கூர்ந்த பாபாவிற்கு சந்தேகம் எழுந்தது. அவர் உடனே அந்த சிறுமியின் வீட்டிற்குச் சென்றார். அங்கு அவர் வந்ததைக்கண்ட உடன் பால் கறந்து கொண்டிருந்த அந்த சிறுமியின் தாயார், 'பாபா! இதோ வந்துவிட்டேன்! இன்று ஏன் இவ்வளவு தாமதம், மதுகரிக்கு?' என்று கேட்டாள்.

பாபா, 'அம்மா! நீ தான் இன்று லாலி(சிறுமி)யிடம் பூரி, பாயஸம் போன்றவற்றை குடுத்தனுப்பினாயே!' என்றார். ''லாலியிடம் நான் கொடுத்தனுப்பினேனா? என்ன பாபா கூறுகிறீர்கள்? காலையிலிருந்து என் மகள் வீட்டை விட்டு வெளியே வரவில்லை. லாலி! ஓ! லாலி! இங்கு வா! இந்த பாபா என்ன கூறுகிறார் பார்!'' என்றாள். பாபா சொன்னதைக்கேட்ட அந்த சிறுமி சிரித்துவிட்டாள். 'பாபா! நீங்கள் நிச்சயமாக கனவுதான் கண்டிருக்கிறீர்கள்!' என்றும் கூறினாள்.

ராதாராணியின் லீலையை அறிந்த பாபா, 'ஆமாம்! என் கனவாகத்தான் இருக்கும்' என்று கூறி அங்கிருந்து நகர்ந்தார். ராதையின் கிருபையை நினைத்து நினைத்து அவருக்கு கண்ணீர் பெறுகிற்று, பாபாவின் மனம் நெகிழ்ந்தது. ராதை தனக்கு தரிசனம் அளித்ததை எண்ணி எண்ணி மகிழ்ந்தார். ராதையின் நிஜரூப தரிசனம் பெறவும் அவர் ஏங்கினார்.

பாபாவினுடைய விநயமும் பக்தியும் விரஜவாசிகளிடம் அவருக்கு பெறும் மதிப்பை ஏற்படுத்தியது. இதனால், பாபா மறுத்தபோதிலும் அவரை ஜெயக்ருஷ்ணதாஸ்பாபாவினுடைய ஆஸ்ரமத்தில் மஹந்தாக நியமித்தனர் வைணவர்கள். சிறிது காலம் சென்ற பின் பாபா இப்பதவியை துறந்து வ்ரஜத்தில் சுதந்திரமாக ஸஞ்சரிக்கலானார்.

ஸனாதனகோஸ்வாமியிடம், மஹாப்ரபு, 'வைஷ்ணவர்களின் சேவையே பிரதானம்! நீ அதை சிரமேற்கொண்டு செய்' என்று கட்டளையிட்டார். இதனால் இன்றும் மக்கள் மனைவியை துறந்து விரஜத்திற்கு வரும் பக்தர்களுக்கு ஸனாதனர், குரு ஆக்ஞையின் பேரில் உணவு அளிப்பார் என்ற ஒரு நம்பிக்கை உண்டு. இதை பரிசோதிக்க எண்ணினார் மாதவதாஸ்பாபா. மதுகரிக்கு அவர் அன்று செல்லவில்லை. ஆனால், என்ன அதிசயம்! அவர் கோபால் பட்டகோஸ்வாமியினுடைய சமாதியை கடந்துச் செல்லும்பொழுது, அங்கிருந்த சேவகர் பாபாவிடம், 'பாபா! இன்று தாங்கள்தான் டாகூருக்கு 'போக்' சமர்ப்பிக்க வேண்டும். பிரஸாதமும் பெற்றுக் கொள்ள வேண்டும். எனக்கு காய்ச்சல் அதிகமாக உள்ளதால்

என்னால் செய்ய இயலவில்லை!' என்று கூறினார். ஸனாதரின் மஹிமையை கண்ட பாபா வியந்தார்.

இப்படி மாதவதாஸ்பாபா, ராதாகாந்த்கோஸ்வாமி எனும் ஹரிகதை கூறும் ஒரு பெரிய பக்தர் மற்றும் ராஜர்ஷி வனமாலீ ராய்பஹாதுர் எனும் ஒரு ஜமீன்தார், மூவரும் சேர்ந்து ஸத்ஸங்கம் செய்தனர்.

கோபீநாத்பாகா எனும் இடத்தில் உள்ள கோபால சாணீதார் ஆஸ்ரமத்தில் தன்னுடைய கடைசி 20 வருடங்களை சத்சங்கத்திலும் சாதுசேவையிலும் கழித்தார் பாபா. 1933இல் அவர் பக்தர்கள் கீர்த்தனம் செய்துக்கொண்டிருக்கும்பொழுதே திவ்ய கோலோக தாமத்தை அடைந்தார்.

***உலகத்தில் ஒரே ஒரு ஜாதியைத்தான் நான் பார்க்கின்றேன். அது பணத்தின் மேல் ஆசையுள்ள ஜாதி. உயர் நிலையில் இருக்கும் ஆன்மீகவாதிகளிலிருந்து அன்றாடம் வேலை செய்து பிழைக்கும் அன்பர்கள் வரை பணம் ஒன்றே தேவையாக இருப்பதால் பணத்தின் மேல் உள்ள ஆசையுள்ள ஜாதி மட்டும்தான் உள்ளது. இதுவே உண்மை நிலை.***

**- ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி**

ஸ்ரீ ஹரி:

**ஸ்ரீ ஸ்ரீதர அய்யாவாள் அன்னதானக் கூடம் - மதுரபுரி**

ஸ்ரீ சாந்தீபனி குருகுல ட்ரஸ்ட் சார்பில், மஹாரண்யம் மதுரபுரி, ஸ்ரீ ஸ்ரீதர அய்யாவாள் அன்னதானக் கூடத்தில் தினமும் நண்பகல் 12 மணியளவில் கிராமப் பொதுமக்களுக்கு அன்னதானம் நடைபெற்றுக் கொண்டு வருகின்றது.

மஹாரண்யம், மலைப்பட்டு, அழகூர் மற்றும் பல கிராமங்களில் இருந்து வரும் பொதுமக்கள் இந்த அன்னதானத்தினால் பயனடைகின்றனர்.

- Trustees

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 134

*நின்னெரிஎரித்தெனை நீறாக்கிடுமுன்*
*நின்னருள் புரி அருணாசலா*

சகலவிதமான சாதனை செய்பவர்களுக்கும் குண்டலினி சக்தியானது விழிப்புறுகிறது. பக்தனுக்கு ஒரு கணத்தில் இது நிகழ்கிறது. ராஜயோகம் புரியும் ஒருவர், குண்டலினி சக்தியை மேலே செலுத்துவதிலேயே முழுக் கவனமாக இருக்கிறார். தியானம் செய்யும் ஒருவர் தனது குருவையோ, தெய்வத்தையோ ஒரு மந்திரத்தையோதான் தியானம் செய்து வருவார்; எனினும், அவருக்கும் குண்டலினி சக்தியானது கிளம்புகிறது. ஆயின், அவர் அதை லட்சியமாகக் கொள்ளாமல், தியானத்திலேயே குறியாக இருக்க வேண்டும். பிரணவ ஜபம் போன்று ஞான சாதனையில் ஈடுபடுவோருக்கும் இது ஏற்படும். இது அனைவருக்கும் மூலாதாரத்தில் இருந்து கிளம்புகிறது. இப்படிக் கிளம்பிச் செல்லும் ப்ராணசக்தியானது முதுகுத் தண்டுவடத்தில் உள்ள ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அனாஹதம், விசுத்தி, ஆக்ஞா, ஸஹஸ்ராரம் போன்ற சக்கர ஸ்தானங்களில் பல அனுபவங்களைத் தருகிறது.

மேற்கண்ட அனுபவம் பக்தனின் விஷயத்தில் இறைவனருளால் மிக எளிதாகவும், கணத்திலும் நிகழ்ந்துவிடுகிறது. ஒரு உத்தம குருவும் தனது பிரிய சீடனுக்கு இதை எளிதில் அளிக்க முடியும். பிறர் விஷயத்தில், இது எளிதில் நடக்கக்கூடிய விஷயமல்ல. இதற்குப் பலகாலம் பிடிக்கும். மேலும், சாதனையில் பரிபக்குவம் மிகவும் அடைந்த பின்னரே இது நிகழ்கிறது. பக்தனைத் தவிரப் பிறருக்கு இந்த அனுபவம் சாதகரின் பக்குவத்தைப் பொறுத்துக் கிரமமாகத்தான் ஏற்படும். குண்டலினி சக்தியானது ஆத்மவிசாரம் மட்டுமே பழகும் ஒருவருக்கு மூலாதாரத்திலிருந்து கிளம்புவதில்லை. அது ஹ்ருதயத்திலிருந்து மூர்த்தா நாடிமூலம் கிளம்பி ஸஹஸ்ராரத்தை அடைகிறது. ஹ்ருதயம் என்பதை இங்குக் கீழ்க்கண்டவாறு குறிப்பிடலாம்.

இரு மார்புக்கு இடையில், நடுவே வலது புறமாய்க் கொஞ்சம் கீழே ஆறு நாடிகள் உள்ளன. இவை பல வண்ணங்களில் உள்ளன. அதில் ஒரு நாடி தாமரைமொட்டு குவிந்து இருப்பது போல் உள்ளது. இதற்குத்தான் புண்டரீகாக்ஷம் என்றும் இருதயம் என்றும் பெயர். இதுவே ஆத்மஸ்தானம். இங்கிருந்துதான் வேதாந்திகளுக்கு ப்ராணசக்தி கிளம்புகிறது.

மேற்கண்ட சாதனங்களில் ராஜயோகத்தை அஷ்டாங்கயோகம் என்று சொல்வதுண்டு. யம, நியம, ஆசன, ப்ராணாயாமம், ப்ரத்யாஹாரம், தியானம், சமாதி என்று சொல்வர். யம, நியமங்களில் முக்கியமாகச் சொல்லப்படுவை, அஹிம்சை, சத்யம், பிரம்மச்சரியம். இவை தவிர மிக நல்ல குணங்களை வளர்த்துக் கொள்ளவேண்டும். இந்த ராஜயோகத்தில் சொல்லப்பட்டுள்ள ஆசனங்களில் ஏதோ ஒரு ஆசனத்தைப் பலகாலும் போட்டுப் பழகவேண்டும். இது ராஜ யோகத்தில் முக்கியம்.

ஒரே ஆசனத்தை பலகாலம் போட்டுப் பழகி வந்தால், மனமானது ஒருமுகப்படும். சரீரத்தில் சலனம் ஏற்படுமானால், மனதில் சலனம் ஏற்படும். யாரிடமாவது பேசிக்கொண்டு இருந்தால் பரவாயில்லை என்று தோன்றினாலோ, எதையாவது பார்க்க வேண்டும் என்று தோன்றினாலோ மனதில் சலனம் ஏற்படுகிறது என அர்த்தம். இந்திரியங்கள் இப்படிச் (கண், வாய் மேற்கண்ட உதாரணத்தில் சலிப்பது போல) சலிப்பது மனதைச் சலிக்க வைக்கும். சரீரம் ஆடாமல் அசையாமல் இருந்தால், மனமும் ஆடாமல் இருக்கும். அதற்குத்தான் ஒரே ஆசனத்தில் உட்கார்ந்து பழக வேண்டும். அது சுகாஸனமாக இருந்தாலும் பரவாயில்லை.

ஆசனம் சித்தியானதற்குப் பின்னரே பிராணாயாமம் செய்ய வேண்டும். ஆசனம் சித்தியானால் மனம் ஒருமுகப்படுவது தெரியும். மேலும் ஒரு ஆசனத்தில் பலமணி நேரம் உட்கார்ந்து எழும்பொழுது, ஒரு புஷ்பம் (பூ) எழுவது போல் எழ வேண்டும். அஃதாவது எழும் பொழுது சரீரத்தில் சிரமமோ வலியோ இருக்கக்கூடாது. இதுவே, ஆசனம் சித்தியானதற்கு அடையாளம்.

(தொடரும்)

# செய்திகள்

### ஏப்ரல் 1-ஆம் தேதி முதல் 6-ஆம் தேதி வரை

சென்னை பிரேமிகபவனத்தில் ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் முன்னிலையில் ஸ்ரீ V. ஸ்வாமிநாத ஆத்ரேயர் அவர்களால் 'ஜானகீ விஜயம்' உபந்யாசம் நடைபெற்றது.

### ஏப்ரல் 7-ஆம் தேதி

கடலூர் கூத்தப்பாக்கம் ஸ்ரீ ராகவேந்திரர் பிருந்தாவனத்தில் இரவு 7 மணி முதல் 9 மணி வரை ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் நாம மஹிமைப் பற்றி அருளுரை வழங்கினார்கள்.

### ஏப்ரல் 9-ஆம் தேதி

ராமநாதபுரம் மாவட்டம் பரமகுடியிலுள்ள சிவஞானம் செட்டியார் கல்யாண மஹாலில் ஸ்ரீ ஸ்வாமிஜி முன்னிலையில் நடைப்பெற்ற மஹாமந்திர கூட்டுப்பிரார்த்தனையில் 1200க்கும் மேல் பக்தர்கள் கலந்துகொண்டனர். இந்நிகழ்ச்சியில், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், மஹாமந்திர கீர்த்தனம் செய்து நாம மஹிமையைப் பற்றி அருளுரை வழங்கினார்கள். இந்த நிகழ்ச்சி ஏற்பாடுகளை திரு. சுரேஷ் மற்றும் திரு. ஆன்ரூஸ் மற்றும் பரமகுடி பக்தர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

### ஏப்ரல் 10-ஆம் தேதி

கெங்குவார்பட்டியில் ஸ்ரீ ஸ்வாமிஜி முன்னிலையில் அவர்களால் மஹாமந்திர நாமகீர்த்தன கூட்டுப்பிரார்த்தனை நடைபெற்றது. கெங்குவார்பட்டி அருகிலுள்ள கிராமங்களுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் நகரவல கீர்த்தனம் செய்தபோது, பெருந்திரளான மக்கள் கூடி ஸ்ரீ ஸ்வாமிஜியுடன் நாமகீர்த்தனம் செய்தார்கள். இந்த நிகழ்ச்சி அருள்மிகு ராமர் கோவிலில் நடைப்பெற்றது. இந்நிகழ்ச்சியை திரு. வினோத், திரு. கோபால கிருஷ்ணன் மற்றும் பக்தர்கள் நன்முறையில் செய்திருந்தனர்.

### ஏப்ரல் 11, 12 தேதிகள்

பெரிய குளம், தென்கரை N.S.N. இரத்தினவேல் சரஸ்வதி திருமண மண்டபத்தில் சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்த்ரா சார்பில் மாலை 6.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை மஹாமந்திர நாமகீர்த்தன கூட்டுப்பிரார்த்தனை ஸ்ரீ ஸ்வாமிஜி முன்னிலையில் நடைபெற்றது. இந்த நாமக்கீர்த்தன கூட்டுப் பிரார்த்தனையில் சுமார் 1200 பேர் கலந்துகொண்டனர். பெரியகுளம் திரு. ஹரே ராம R. கிருஷ்ணகுமார் அவர்கள் மற்றும் பக்தர்கள் இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தனர்.

### ஏப்ரல் 13, 14 தேதிகள்

மதுரை, தல்லா குளம், கோகலே ரோடு, லக்ஷ்மி சுந்தரம் ஹாலில் ஸ்ரீ ஸ்வாமிஜி முன்னிலையில் மஹாமந்திர நாமகீர்த்தன கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்றது.

சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்த்ரா சார்பில், மதுரமுரளியில் வெளிவந்த 'ஸனாதனப் புதிர்' நூல் வடிவம் பெற்று ஸ்ரீ ஸ்வாமிஜி முன்னிலையில் மதுரையில் The Divine Life Societyயின் தலைவர் ஸ்ரீ சுந்தரானந்த சரஸ்வதி ஸ்வாமிகள் அவர்களால் வெளியிடப்பட்டது. ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரையை கேட்பதற்காக மதுரை மற்றும் சுற்றுப்புறத்திலுள்ள பக்தர்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் நாமக்கீர்த்தன கூட்டுப் பிரார்த்தனையில் கலந்துகொண்டனர்.

### ஏப்ரல் 15-ஆம் தேதி

மணிமங்கலம், பெரியார் மழலையர் தொடக்கப்பள்ளியின் வெள்ளிவிழாவில் மாலை 5.30 மணியளவில் ஸ்ரீ ஸ்வாமிஜி கலந்து கொண்டு மாணவர்களுக்குப் பரிசளித்து அருளுரை வழங்கினார்கள்.

தமிழ் வருடப் பிறப்பு அன்று இக்கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்றது எல்லோருக்கும் மகிழ்ச்சியை அளித்தது. இந்த நிகழ்ச்சியின் ஏற்பாடுகளை மதுரை திரு. ராமானுஜதாசன் மற்றும் மதுரை ஸத்சங்கத்தினர் சிறப்பாக செய்திருந்தனர்.

## செய்திகள்

### ஏப்ரல் 15-ஆம் தேதி முதல் ஏப்ரல் 22-ஆம் தேதி வரை

**உதயாஸ்தமன ஸப்தாஹம் - மதுரபுரி**

குருநாதரின் திருவடியை அடைந்துவிட்ட சென்னை பிரேமிகபவன ஸ்தாபகர் ஸ்ரீமதி ஜெயந்தீ ஜானகிராமனுடைய நினைவாக, வர்ஷாப்திகத்தை ஒட்டி, ஒரு உதயாஸ்தமன பாகவத ஸப்தாஹம், மதுரபுரி பாகவத பவனத்தில் ஸ்ரீஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இந்த ஸப்தாஹ வைபவத்தில பிரம்மஸ்ரீ ஸ்ரீகாந்த பாகவதர், பிரம்மஸ்ரீ மல்லிகார்ஜுன சர்மா, பிரம்மஸ்ரீ சந்திரசேகர பாகவதர், திருச்சூர் ஸ்ரீ கிருஷ்ணய்யர் இவர்களால் பிரதானமாக மூலபாராயணம் படிக்கப் பெற்று, கூடவே பாகவதபிரவசனமும் மிகவும் ராஸிக்யமாக செய்யப்பட்டது. ஏராளமான பக்தர்களும் பாராயணத்தில் கலந்துகொண்டனர்.

தினமும் காலை 6.30 மணிக்கு பாராயணமும், பிரவசனமும் துவங்கி மாலை 6.30 மணி வரை மிகவும் சிறப்பாக நடைபெற்றது. தினமும், இரவு, பாகவதர்களால் பஜனையும், பின்னர் திவ்யநாம ஸங்கீர்த்தனமும் நடைபெற்றது. பிறகு, பிரேமிகவரதனுக்கு டோலோத் ஸவம் செய்யப்பெற்றது. இந்த வைபவத்தில், நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு, சிரத்தையுடன் அனுபடனமும், மிகவும் குதூஹலத்துடன் கதாசிரவணமும் செய்தார்கள்.

ஏப்ரல் 18-ஆம் தேதியன்று இரவு அபங்க பஜனையில் ஸ்ரீ ஞானேச்வரன் பாண்டுரங்க பக்தர்களின் மஹிமை பற்றி ஸங்கீத உபந்யாஸம் செய்ய அனைவரும் ரஸித்து மகிழ்ந்தனர். ஏப்ரல் 19-ஆம் தேதியன்று பாராயணத்தில் ஸ்ரீ க்ருஷ்ண ஜனனம் நடைபெறும் சமயத்தில் பகல் 12 மணி அளவில் எங்கிருந்தோ வந்த மேகங்கள், இடி மின்னலுடன் கூடிய அபரிமிதமான மழையை குறுகிய நேரத்தில் வர்ஷித்து அனைவரின் உள்ளத்தையும் குளிரச் செய்தது. மதுரபுரியின் பரிபூர்ண சாந்நித்யத்தையும், குரு கிருபையையும் எல்லோரும் உணரும்படியாக அமைந்தது என்பதற்கு இதுவே சான்று. தத்வமஸி கனபாடிகள் வேத பரிமளத்துடன் அம்பரீஷ சரித்திரத்தை பாகவத ச்லோகங்களுடன் எடுத்துச் சொன்னது மிகவும் அழகாக அமைந்தது. அன்று இரவு நடந்த ''ஹரே ராம...'' மஹாமந்திர திவ்ய நாமகீர்த்னத்தில் ஸ்ரீஸ்ரீ ஸ்வாமிஜி

கலந்துகொண்டு, ஆனந்தமாக இரு கைகளையும் தூக்கி லலித நர்த்தனம் செய்தது அனைவருக்கும் ஆனந்தத்தைக் கொடுத்தது.

ஏப்ரல் 20-ஆம் தேதியன்று ஸ்ரீ சந்துரு அவர்கள் க்ருஷ்ண பால லீலைகளை மிகவும் ஹாஸ்யமாகக் கூறினார். அக்ஷய த்ருதீயையான அன்று இரவு நடந்த அபங்க திவ்யநாமத்தில், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் பரவசமாக பாண்டுரங்கனின் ஏக நாமாவை கோஷமாக கீர்த்தனமும் செய்து, 'மத்யே புண்டலீகா உபா' என்ற பதத்தில் லயமாகி பாண்டுரங்க **பா**வத்தில் சிலைபோல் சில நிமிடங்கள் நின்றது பக்தர்களுக்கு தர்சனானந்தமாக இருந்தது. அன்று பாண்டுரங்கனின் ஜெயந்தி என்பது மேலும் விசேஷம்.

ஸ்ரீ கிருஷ்ணனின் பட்டமகிஷிகளின் விவாஹம், ருக்மிணீ-கிருஷ்ண ஏகாந்த ஸம்வாதம், மற்றும் ஸுதாமா சரித்ரம், இவற்றை மிகவும் ரஸிக்கும்படியாக ஸ்ரீ ஸ்ரீகாந்தசர்மா ப்ரவசனம் செய்தார். ஸப்தாஹத்தின் கடைசி நாளன்று பாராயண பிரவசனத்தின் முடிவில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் ஸமேத ஸ்ரீ - மாதுரீஸகி பிரேமிகவரதனுக்கு விசேஷ திருமஞ்ஜனம் செய்தார்கள். ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் தம் திருக்கரங்களால் கலச தீர்த்தப் பிரசாதம் வழங்கினார்கள். இந்த வைபவத்தின் சிகரமாக ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களே எல்லோருக்கும் தாம்பூலப் பை வழங்கினார்கள். இந்த நிகழ்ச்சி நிறைவுபெற்று விட்டது என்ற ஏக்கத்துடன் அனைவரும் விடைபெற்றனர்.

இந்த வைபவத்தில் கலந்துகொள்ள பாக்கியம் கிடைத்தவர்கள் பகவத் கிருபைக்கும் குருகிருபைக்கும் பூரணமாக பாத்திரமானவர்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ!

### ஏப்ரல்7-ஆம் தேதி

ஸ்ரீ சாந்தீபனி குருகுல டிரஸ்ட் சார்பில், மஹாரண்யம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு ஜாமென்ட்ரி பாக்ஸ், அட்லஸ், ஆங்கில-தமிழ் அகராதி திரு. பாலாஜி அவர்களால் வழங்கப்பட்டது.

### மே 1-ஆம் தேதி

ஸ்ரீ சாந்தீபனி குருகுல பாடசாலையின் 12-வது ஆண்டு விழா குருகுல டிரஸ்ட் சார்பில் மஹாரண்யம் மதுரபுரி ஆஸ்ரம வளாகத்தில்

நடைபெற்றது. இந்த விழாவில் வேதம் சொல்லுதல், கீதை ஒப்புவித்தல், சமஸ்கிருதத்தில் பேச்சுப் போட்டி போன்றவை நடைபெற்றன. அவ்விழாவின் நிகழ்ச்சிகள் மே 1-ஆம் தேதி நடைபெற்றது. பாடசாலை மாணாக்கர்களின் பெற்றோர், பாடசாலை அத்யாபகர்கள், முதல்வர் மற்றும் பலர் கலந்துகொண்டனர். இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராக ''குரு கைங்கர்ய ரத்னம்'' திரு. D. தீனதயாளன் அவர்கள் (M/s. Vijay Associates, Builders & Flat Promoters, Chennai) இதில் கலந்துகொண்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கினார்கள்.

### மே 2-ஆம் தேதி

சேலம் திரு. வெங்கட்ராமன் - ஷீலா தம்பதியினரின் இல்லத்தில் காலை 7 மணியளவில் ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளாசியுடன் சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்த்ரா, சேலம் கிளையை, தென் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் தூத்துக்குடி K. கதிரேசன் மற்றும் சேலம் பேராசிரியர் திரு. கருணாகரன் முன்னிலையில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார்கள். இதில் எண்ணற்ற பக்தர்கள் கலந்துகொண்டனர்.

ஸ்ரீ ஹரி:

உலக அமைதி மற்றும் நன்மைக்காகவும், மழை வேண்டியும் அகண்ட நாமக்கீர்த்தனம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்களின் ஆலோசனையின்படி, அவர்களது அருளாசியுடன் சென்ற 3 ஆண்டுகளாக நடைபெற்றதைப் போலவே இந்த ஆண்டும் 4வது முறையாக தொடர்ந்து 48 நாட்கள் 'யோகி ராம்சுரத்குமார் யோகிராம்சுரத்குமார்' யோகிராம்சுரத்குமார் ஜெயகுருராயா என்ற ஒரே நாமாவை அகண்டமாக நாமசங்கீர்த்தனம் செய்ய 15.04.2007 ஞாயிற்றுக்கிழமை முதல் 01.06.2007 வெள்ளிக் கிழமை வரை காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை சென்னை மாநகரின் பல்வேறு இடங்களில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

அனைவரும் நாமகீர்த்தனத்தில் கலந்துகொண்டு குருவருளுக்கும், இறையருளுக்கும் பாத்திரமாகும்படி கேட்டுக் கொள்கிறோம்.

விவரங்களுக்கு

**B. கபீர்தாஸ்** - 9444015142

# நாமஸங்கீர்த்தனச் செய்திகள்

### ஏப்ரல் 8-ஆம் தேதி

கடலூர், மஞ்சள்குப்பம், டவுன் ஹாலில், இரவு 7 மணி முதல் இரவு 9 மணி வரை நடைபெற்ற மஹாமந்திர நாமகீர்த்தனப் கூட்டுப் பிரார்த்தனையில் நமது சத்சங்கத்தைச் சேர்ந்த திரு. S.P. சேஷாத்திரி, திரு. K. கண்ணன் கலந்துகொண்டு குரு மஹிமை, நாம மஹிமைப் பற்றி உரை நிகழ்த்தினார்கள்.

### ஏப்ரல் 15-ஆம் தேதி

தூத்துக்குடி, கோவில்பட்டி அருகில் உள்ள கோவிந்தம்பட்டி, தொட்டம்பட்டி, ஆத்திக்கிணறு ஆகிய கிராமங்களில் நாம ஸங்கீர்த்தனம் நடைபெற்றது. ஒவ்வொரு கிராமத்திலும் சுமார் 300க்கும் மேற்பட்ட மக்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டார்கள். அன்றைய தினத்தில் கடும் மழை, இடி, மின்னலையும் பொருட் படுத்தாது அத்தனை மக்களும் ஆர்வத்துடன் வந்திருந்து நாம கீர்த்தனத்தில் நனைந்தனர். மஹாமந்திர கீர்த்தனம் சிறப்பாக நடைபெற்றது.

இதற்கான ஏற்பாடுகளை, தூத்துக்குடி ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி கேந்திரா திரு. கதிரேசன் அவர்களும், கோவில்பட்டியைச் சேர்ந்த திரு. இளங்கோ அவர்களும் செய்தார்கள். நமது ஸத்சங்கத்தைச் சேர்ந்த வசந்தராஜன் இவற்றில் கலந்துகொண்டு நாம மஹிமையைப் பற்றி பேசினார். இந்தக் கிராமங்களில் ஒவ்வொரு ஞாயிறும் மாலை வேளைகளில் மஹாமந்திர நாமகீர்த்தனம் நடைபெறுகின்றது.

*Copyright of articles published in '**MADHURAMURALI**' is reserved. No part of this Magazine may be reproduced, reprinted or utilised in any form or by any means, electronic or mechanical, including photocopying, recording or by any information storage and retrieval system, without permission in writting from the publisher of Madhura Murali.*

ஸ்ரீ ஹரி :

## ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின் சிவகாசி விஜயம்

### ஆன்மீக உபன்யாசம் - மக்களின் நலனுக்காக மஹாமந்திர மாபெரும் பிரார்த்தனை

தேதி : மே 16, 2007 புதன்கிழமை
நேரம் : மாலை 6.00 - 8.30 வரை
இடம் : கம்மவார் திருமண மண்டபம், சிவகாசி

மக்களின் வாழ்க்கையில் அன்றாடம் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களை நிவர்த்தி செய்ய, மேன்மேலும் மக்களுக்கு ஆன்மீகத்தில் நாட்டம் ஏற்பட ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்களின்

ஆன்மீகச் சொற்பொழிவும், அதன்பின் வந்திருக்கும் அனைவரின் பிரார்த்தனைகள் நிறைவேறும் பொருட்டு,

*ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே*
*ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே*

என்ற மஹாமந்திர நாமகீர்த்தனம் செய்து, ஸ்வாமிஜி அவரவர்களுக்குப் பிரசாதம் வழங்க உள்ளார்கள்.

இந்த அற்புதமான நல்ல சந்தர்ப்பத்தை அன்பர்கள் அனைவரும் பயன்படுத்தி, எல்லா நலன்களும் அடைவோமாக. இந்த விழாவில் ஜாதி, மத வேறுபாடின்றி எல்லோரும் கலந்து கொண்டு பயனடைய வேண்டுகிறோம்.

Sri. Hari :

### SATSANG PROGRAMMES AT MIDDLE EAST COUNTRIES

| | | |
|---|---|---|
| Satsang by | : | Sri M.K. Ramanujam and Sri Suresh |
| Topics | : | Kalikala Uchitam Dharmam, Bhagavata Dharmam, Srimad Bhagavatam, Krishna Bhatthi, Guru prabavam, Tirumalai, Bhakthacharitram |
| From | : | 27-04-2007 to 25-05-2007 |
| Place | : | Abu Dhabi, Sharjah, Muscat, Sohar |
| Arranged by | : | Chaitanya Mahaprabhu |
| on the event | : | Nama Bhiksha Kendra<br>Adi Sankara and Ramanujacharya's Jayanthi |

Visit website www.namadwaar.org
For further enquiries please contact
email : contact@namadwaar.org or
mramanuj@gmail.com
namadwaar@gmail.com

## ஸ்ரீ ஸ்வாமிஜியின் நிகழ்ச்சி நிரல்

| தேதி/நேரம் | நிகழ்ச்சி/இடம் | தொடர்புக்கு |
|---|---|---|
| 05.05.07 - 08.05.07 | ''ஹரேராம...'' மஹாமந்திர நாமகீர்த்தன கூட்டுப்பிரார்த்தனை<br>இடம் : பிரியதர்சினி ஹால்<br>East Fort, திருவனந்தபுரம் | திரு. ராமசுப்ரமணியன்<br>938800909 |
| 09.05.07 - 11.05.07 | நாமகீர்த்தன கூட்டுப் பிரார்த்தனை<br>இடம் : ஸ்ரீ நேரு வித்யாலயா,<br>R.S. புரம், கோயமுத்தூர் | திரு. கிருஷ்ணன்,<br>0422-2235139<br>திரு. சத்தியமூர்த்தி<br>94433 37100 |
| 13.05.07 | ஏகாதசி, மதுரபுரி ஆஸ்ரமம் | |
| 14.05.07 - 19.05.07 | சிவகாசி விஜயம் | திரு. குமாரவேல் |
| 15.05.07<br>16.05.07<br>6 - 8 p.m. | சிவகாசி சுற்றியுள்ள கிராமங்கள்<br>கூட்டுப் பிரார்த்தனை<br>கம்மவார் திருமண மண்டபம்<br>சிவகாசி | திரு. கதிரேசன் |
| 17.05.07 | கூட்டுப்பிரார்த்தனை<br>மிளகாய் வத்தல் வியாபாரிகள்<br>சங்க கலையரங்கம், விருதுநகர் | |
| 18.05.07 | கூட்டுப் பிரார்த்தனை<br>இடம் : தெருக்கூர் கல்யாண மண்டபம்<br>(ஆண்டாள் திருக்கோயில் அருகில்)<br>ஸ்ரீவில்லிபுத்தூர் | |
| 19.05.07 | கல்லமநாயக்கர்பட்டி<br>(ஆலங்குளம் அருகில்) | |
| 20.05.07 | அம்பாசமுத்திரம் | |
| 21.05.07 | தூத்துக்குடி | |
| 27.05.07<br>27.05.07 | ஏகாதசி, மதுரபுரி ஆஸ்ரமம்<br>கூட்டுப் பிரார்த்தனை<br>இடம் : மகாத்மா காந்தி பூங்கா,<br>டிரங்க் ரோடு, வாலாஜாபேட்டை | <br>9245135687<br>9443072646 |
| 31.05.07 | கும்பகோணம் | |
| 02.06.07<br>03.06.07 | மஹாமந்திர கூட்டுப் பிரார்த்தனை<br>புதுச்சேரி | திரு. ரவிச்சந்திரன்<br>9443068943 |